**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 322/2024**
**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சண்முகம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சடையன்** | **Calling** | : | **வெல்டிங் வேலை** |
| **Village** | : | **பூதிப்புரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **54** |
| | | | **Dated** | : | **11.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. சண்முகம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். புகார் மனு கொடுக்கும் போது காவல்நிலையத்தில் பார்த்தேன். இந்த விபத்து வழக்கில் இறந்துபோன வினோத் குமார் எனது மகன் ஆவார். கடந்த 06.05.2024ம் தேதி காலை 11.30 மணியளவில் எனது மைத்துனருக்கு சொந்தமான ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தில் எனது மகன் வினோத்குமார் எனது வீட்டில் இருந்து தோமையார்புரத்தில் அவரது மாமாவின் வீட்டிற்குச் செல்லும்போது, அஞ்சலி ரவுண்டான மேம்பாலம் அருகே செல்லும்போது, முதலில் தனாக விழுந்து அடிபட்டது என்று சொன்னார்கள், பிறகு CCTV கேமராவைப் பார்த்தபோது ஒரு சிவப்பு கலர் கார் வந்து என் மகனை

இடித்துச் சென்றதாக பதிவாகியிருந்தது. எனக்கு இது சம்மந்தமாக என் அண்ணன் மகன் பிரபு தொலைபேசியில் தகவல் கூறினார். நான் திண்டுக்கல் அரசு மருத்துவனை சென்று பார்த்தேன், அங்கு என் மகனுக்கு தலை மற்றும் கன்னம், கை, கால் ஆகியவற்றில் இரத்தக் காயங்கள் இருந்தன. பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி எனது மகன் இறந்துவிட்டார். மேற்படி விபத்து சம்மந்தமாக தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். மேற்படி புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த சிவப்பு கலர் காரை ஓட்டி வந்தது ஆஜர் எதிரி தான் என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எதிரி தரப்பிற்கு போதுமான வாய்ப்பு கொடுக்கப்பட்டும், எதிரி தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me/before me in open court on 11.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2025.11.11 18:18:06 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 322/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. கருப்பசாமி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கந்தசாமி** | **Calling** | : | **கொத்தனார் வேலை** |
| **Village** | : | **பூதிப்புரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **29** |
| | | | **Dated** | : | **11.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. கருப்பசாமி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அசா. 1 எனது சித்தப்பா. இந்த விபத்தில் இறந்துபோனது என் சித்தப்பா மகன். கடந்த 06.05.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு TN 57 BE 1123 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை அவரது தாய் மாமாவிடம் வாங்கிக் கொண்டு, வினோத்குமார் பூதிப்புரத்தில் இருந்து தோமையார்புரத்திற்கு செல்லும்போது, அஞ்சலி ரவுண்டான மேம்பாலம் வளைவு அருகே செல்லும்போது, ஒரு சிவப்பு நிற கார் வந்து இடித்ததாக பிரபு, வீரக்குமார் என்பவரும் எனது சித்தப்பாவிற்கு தகவல் கொடுக்கவே, நானும், எனது

சித்தப்பாவும் சம்பவ இடத்திற்கு சென்றோம். வினோத்குமார் அங்கு பின்தலையில் அடிபட்டு சுயநினைவு இல்லாமல் இருந்தார். அப்போது அவரை 108 ஆம்புலன்ஸில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பின்னர் அங்கு பரிசோதித்த மருத்துவர் மேல் சிகிச்சைக்காக மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி வினோத்குமார் இறந்துவிட்டார். மேற்படி விபத்து சம்மந்தமாக தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் என் சித்தப்பா சண்முகம் புகார் மனு கொடுத்தேன். நான் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன். **மேற்படி சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த சிவப்பு கலர் காரை ஓட்டி வந்தது ஆஜர் எதிரி தான் என்று காவல் நிலையத்தில் வைத்து 17.05.2024 ம் தேதி தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

எதிரி தரப்பிற்கு போதுமான வாய்ப்பு கொடுக்கப்பட்டும், எதிரி தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me/before me in open court on 11.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2025.11.11 18:18:15 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 322/2024**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. வீரக்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சின்ன முத்து** | **Calling** | : | **டைல்ஸ் ஒட்டும் வேலை** |
| **Village** | : | **பூதிப்புரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **24** |
| | | | **Dated** | : | **11.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), **திரு. வீரக்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 06.05.2024ம் தேதி காலை 11.30 மணி இருக்கும், நானும் எனது அண்ணன் பிரபுவும் பூதிப்புரத்தில் இருந்து தோமையார்புரத்திற்கு அனுஜ் டைல்ஸ் கடைக்கு போய்க் கொண்டிருந்தபோது, அஞ்சலி டவுண்டான மேம்பாலத்தில் ஏறிக்கொண்டு இருந்தபோது ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தில் அடிபட்டு ஒருவர் கீழே கிடந்தார். அவரை அருகில் போய் பார்த்தபோது, அவர் எங்கள் ஊரைச் சேர்ந்த வினோத்குமார் என்பது தெரிய வந்தது. உடனே எனது அண்ணன் பிரபு, வினோத்குமாரின் தகப்பனார்

சண்முகத்திற்கு தகவல் சொன்னார். அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அடிபட்டுக் கிடந்த வினோத்குமாரிடம் பேசியபோது கார் வந்து மோதியதாக என்னிடம் சொன்னார். உடனே அவரது தம்பி சிவாஜி என்பவருக்கு அலைபேசி மூலம் தெரிவித்தேன். அதன்பிறகு மேற்படி வினோத்குமார் மயக்கமாகிவிட்டதால், அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அதன் பிறகு அவர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எதிரி தரப்பிற்கு போதுமான வாய்ப்பு கொடுக்கப்பட்டும், எதிரி தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me/before me in open court on 11.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2025.11.11 18:18:24 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 322/2024**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பிரபு** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பால சுப்பிரமணியன்** | **Calling** | : | **டைல்ஸ் ஒட்டும் காண்ட்ராக்ட் வேலை** |
| **Village** | : | **பூதிப்புரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **25** |
| | | | **Dated** | : | **11.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 4), **திரு. பிரபு** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டைல்ஸ் ஒட்டும் காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 06.05.2024ம் தேதி காலை 11.30 மணி இருக்கும், நானும் எனது தம்பி வீரக்குமாரும் பூதிப்புரத்தில் இருந்து தோமையார்புரத்திற்கு அனுஜ் டைல்ஸ் கடைக்கு போய்க் கொண்டிருந்தபோது, அஞ்சலி டவுண்டான மேம்பாலத்தில் ஏறிக்கொண்டு இருந்தபோது ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தில் அடிபட்டு ஒருவர் கீழே கிடந்தார். அவரை அருகில் போய் பார்த்தபோது, அவர் எங்கள் ஊரைச் சேர்ந்த வினோத்குமார் என்பது தெரிய வந்தது. உடனே நான் வினோத்குமாரின் தகப்பனார் சண்முகத்திற்கு

தகவல் சொன்னேன். அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அதன் பிறகு அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அதன் பிறகு அவர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

எதிரி தரப்பிற்கு போதுமான வாய்ப்பு கொடுக்கப்பட்டும், எதிரி தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**Taken down by me/before me in open court on 11.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2025.11.11 18:18:32 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**